# ஆகஸ்ட் - 12- சனி

## புனித ஜேன் பிரான்சஸ் சந்தாள்

## “உங்கள் நம்பிக்கைக் குறைவுதான் காரணம்”
## மத் 17:19

### முதல் வாசகம்: இணைச்சட்டம் 6 : 4 – 13

இஸ்ரயேலே, செவிகொடு! நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே ஆண்டவர்.உன் முழு இதயத்தோடும், உன் முழு உள்ளத்தோடும், உன் முழு ஆற்றலோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக!இன்று நான் உனக்குக் கட்டளையிடும் இவ்வார்த்தைகள் உன் உள்ளத்தில் இருக்கட்டும்.நீ அவற்றை உன் பிள்ளைகளின் உள்ளத்தில் பதியுமாறு சொல். உன் வீட்டில் இருக்கும் போதும், உன் வழிப்பயணத்தின்போதும், நீ படுக்கும்போது, எழும்போதும் அவற்றைப் பற்றிப் பேசு.உன் கையில் அடையாளமாக அவற்றைக் கட்டிக்கொள். உன் கண்களுக்கிடையே அடையாளப்பட்டமாக அவை இருக்கட்டும். உன் வீட்டின் கதவு நிலைகளிலும் நுழை வாயில்களிலும் அவற்றை எழுது.மேலும், ஆபிரகாம்,ஈசாக்கு யாக்கோபு எனும் உன் மூதாதையருக்குக் கொடுப்பதாக ஆணையிட்டுக் கூறிய நாட்டுக்குள் உன் கடவுளாகிய ஆண்டவர் உன்னைப் புகச் செய்யும்போதும், நீ கட்டி எழுப்பாத, பரந்த வசதியான நகர்களையும்,நீ நிரப்பாத எல்லாச் செல்வங்களால் நிறைந்த வீடுகளையும், நீ வெட்டாத பாறைக் கிணறுகளையும், நீ நடாத திராட்சைத் தோட்டங்களையும், ஒலிவத் தோப்புகளையும் அவர் உனக்குக் கொடுக்கும் போதும், நீ உண்டு நிறைவுகொள்ளும் போதும்,அடிமைத்தன வீடாகிய எகிப்து நாட்டினின்று உன்னை வெளியே கூட்டிவந்த ஆண்டவரை மறந்துவிடாதபடி கவனமாய் இரு.உன் கடவுளாகிய ஆண்டவருக்கு அஞ்சி நட! அவருக்குப் பணிந்து அவர் பெயராலே ஆணையிடு!

**பதில்பாடல் :** என் ஆற்றலாகிய ஆண்டவரே உம்மிடம் நான் அன்பு கூர்கிறேன்.

### நற்செய்தி : மத்தேயு 17 : 14 – 20

அக்காலத்தில் அயேசு மக்கள் கூட்டத்தினரிடம் வந்தபோது ஒருவர் அவரை அணுகி அவர் முன் முழந்தாள் படியிட்டு, ”ஐயா, என் மகனுக்கு இரங்கும் அவன் வலிப்பு நோயால் பெரிதும் துன்புறுகிறான். அடிக்கடி தீயிலும் தண்ணீரிலும் விழுகிறான். உம் சீடர்களிடம் அவனைக் கொண்டுவந்தேன் அவனைக் குணமாக்க அவர்களால் முடியவில்லை” என்றார். அதற்கு இயேசு, ”நம்பிக்கையற்ற சீரழிந்த தலைமுறையினரே, எவ்வளவு காலம் நான் உங்களோடு இருக்க இயலும்? எவ்வளவு காலம் நான் உங்களைப் பொறுத்துக் கொள்ள இயலும்? அவனை என்னிடம் இங்கே கொண்டு வாருங்கள்” என்று கூறினார்.கொண்டுவந்ததும் இயேசு அப்பேயைக் கடிந்துகொள்ளவே, அது அவனைவிட்டு வெளியேறியது. அந்நேரமே சிறுவன் குணமடைந்தான்.பின்பு சீடர்கள் தனிமையாக இயேசுவை அணுகி வந்து, ”அதை ஏன் எங்களால் ஓட்ட இயலவில்லை?” என்று கேட்டார்கள்.இயேசு அவர்களைப் பார்த்து, ”உங்கள் நம்பிக்கைக் குறைவுதான் காரணம். உங்களுக்குக் கடுகளவு நம்பிக்கை இருந்தால் நீங்கள் இம்மலையைப் பார்த்து” இங்கிருந்து பெயர்ந்து அங்குப் போ” எனக் கூறினால் அது பெயர்ந்து போகும். உங்களால் முடியாதது ஒன்றும் இராது என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்றார்

**தியானம்:** எமது கிறிஸ்த்தவ வாழ்வு நம்பிக்கையில்தான் கட்டப்பட்டுள்ளது. மழையும் புயலும் கட்டடத்தை, மரங்களை அசைக்கப் பார்க்கின்றன. உறுதியான கட்டடங்களும் ஆழ வேர் ஊன்றிய மரங்களும் நிலைத்து நிற்கின்றன. மற்றவை மழையின் புயலின் தாக்கத்தால் சரிந்து வீழ்கின்றன. அவ்வாறு எம் விசுவாச வாழ்வை அசைக்க பல சக்திகள் நம்மை அணுகலாம். அவை நோய் வடிவில், துன்பதுயரம் வடிவில், உறவுகள் வடிவில், நண்பர்கள் வடிவில் வரலாம். அவற்றை இனம் கண்டுகொள்ள தூய ஆவியானவர் எமக்கு உதவி செய்வார். “அதை செய்ய வேண்டாம் என்று என் உள் மனம் சொல்லியது ஆனால் நான் கேட்கவில்லை” என்று பலர் கூறக் கேட்டிருக்கலாம். இது ஒருவகையில் ஆவியாரின் தூண்டுதல். நற்செய்தியில் யேசு நம்பிக்கை பற்றிக் கூறுகிறார். கடுகளவு நம்பிக்கை எம்மிடம் உள்ளதா? யானையின் பலம் அதன் தும்பிக்கையில், மனிதரின் பலம் நம்பிக்கையில் என்பார்கள். இது உண்மை. எமது நம்பிக்கை நம்மை வாழ வைக்கும். நாம் கடவுளை நம்ப வேண்டும். முயற்சி செய்ய வேண்டும். அப்போது பலனை பெற்றுக்கொள்வோம். நம்மை படைத்த இறைவன் எம்மை கைவிடாமல் எல்லா தீங்கினின்றும் எம்மை பாதுகாப்பாராக.